**செப்டம்பர் – 18**

# TNPSC துளிகள்

- R. வைஷாலி உஸ்பெகிஸ்தானின் சமர்கண்டில் நடைபெற்ற இறுதிச் சுற்றில் டான் ஜோங்கியை எதிர்த்துப் போட்டியிட்டு FIDE மகளிர் கிராண்ட் சுவிஸ் 2025 போட்டியில் பட்டத்தை வென்றார்.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு உரிமைகள் திட்டம்




- தமிழ்நாடு உரிமைகள் (TN RIGHTS) திட்டமானது, எட்டு மாவட்டங்களில் சமூகப் பதிவேட்டுச் சேர்க்கை (SRE) மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடங்கியுள்ளது.
- இந்தத் திட்டமானது மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்துறையால் செயல்படுத்தப் படுகிறது.
- இது உலக வங்கி நிதியால் ஆதரிக்கப்படுகிறது.
- இந்தத் திட்டமானது மாற்றுத்திறனாளிகளுக்கான (PwDs) உள்ளடக்கம், அணுகல் மற்றும் வாய்ப்புகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மக்கள் தொகை கணக்கெடுப்பின் தற்போதைய கட்டமானது கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், விருதுநகர், தூத்துக்குடி, தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் திருவள்ளூர் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டது.
- சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தென்காசியில் ஏற்கனவே மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்து வருகிறது.
- தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று மாற்றுத் திறனாளிகளை (PwDs) அடையாளம் காண்பார்கள்.
- சேகரிக்கப்பட்ட தரவுகளில் கல்வி, வேலைவாய்ப்பு, சிகிச்சை சேவைகள் மற்றும் நலத் திட்டங்களை அணுகுவது பற்றிய விவரங்கள் அடங்கும்.
- தமிழ்நாட்டில் 13 லட்சம் மாற்றுத்திறனாளிகள் (PwDs) வசிக்கின்றனர்.
- மாற்றுத்திறனாளிகளின் (PwDs) எண்ணிக்கை குறித்த சரியான தரவுகள் மாநிலத்தில் இல்லை.
- மாற்றுத்திறனாளிகளுக்கு (PwDs) சேவைகளை வழங்குவதற்கான ஒரே தளமாக இந்த சமூகப் பதிவேடு செயல்படும்.

## தமிழ்நாட்டில் சாலை விபத்துகள் 2023





- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் (MoRTH) ஆனது இந்தியாவில் சாலை விபத்துகள் 2023 அறிக்கையை வெளியிட்டது.
- 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத்தில் 67,213 சாலை விபத்துகள் பதிவானது, இது தேசிய அளவிலான மொத்த விபத்துகளில் 14% ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் 64,105 ஆக இருந்த தமிழ்நாட்டில் பதிவான சாலை விபத்துகள் 4.6% அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டில் சாலை விபத்து காரணமாக 18,347 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் 17,884 ஆக இருந்த எண்ணிக்கையை விட 2.5% அதிகமாகும்.
- உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்தபடியாக சாலை விபத்து காரணமான மொத்த உயிரிழப்புகளில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் அதிக வேகம் காரணமாக 13,363 விபத்துகளும் 3,932 உயிரிழப்புகளும் ஏற்பட்டது.
- தமிழ்நாட்டில் குழந்தைகள் உட்பட இரு சக்கர வாகனம் ஓட்டுபவர்கள் அதிக எண்ணிக்கையில் இருந்தாலும், குழந்தைகளுக்கான தலைக்கவசம் / ஹெல்மெட் விதிமுறைகள் இன்னும் அமல்படுத்தப்படவில்லை.
- தமிழ்நாடு அரசானது 2007 ஆம் ஆண்டில் ஒரு சாலைப் பாதுகாப்புக் கொள்கையை வெளியிட்டது, ஆனால் அதன் நிலையான அமலாக்கம் பேணப் படவில்லை.
- தமிழ்நாட்டிற்கு 2030 ஆம் ஆண்டு இலக்குகள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான வேக மேலாண்மை வழிகாட்டுதல்களுடன் கூடிய மாநிலச் சாலைப் பாதுகாப்பு செயல் திட்டம் அவசியமாகும்.

## ஸ்டான்லி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு

- மேட்டூரில் உள்ள ஸ்டான்லி நீர்த்தேக்கம் ஆனது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 02 ஆம்

தேதியன்று ஆறாவது முறையாக 120 அடியை எட்டியது.

- நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக, இந்த அணை முதன்முதலில் 2025 ஆம் ஆண்டு ஜூன் 29 ஆம் தேதியன்று அதன் முழு கொள்ளளவை எட்டியது.
- பின்னர் இந்த அணை ஜூலை 05, ஜூலை 20, ஜூலை 25 மற்றும் ஆகஸ்ட் 20 ஆகிய தேதிகளில் அதன் முழு கொள்ளளவை எட்டியது என்ற நிலையில் பின்னர் செப்டம்பர் மாதத்தில் மீண்டும் நிரம்பியது.





## தேசியச் செய்திகள்

### வக்ஃப் (திருத்தம்) சட்டம் 2025



- உச்ச நீதிமன்றம் ஆனது, 2025 ஆம் ஆண்டு வக்ஃப் (திருத்தம்) சட்டத்தின் 'கொடுங்கோன்மையான' பகுதிகளை நிறுத்தி வைத்தாலும், அந்தச் சட்டத்தினை நிலை நிறுத்துகிறது.
- சரிபார்ப்பு முறைகள் இல்லாததால், இஸ்லாமியத்தைப் பின்பற்றுவதற்கான ஆதாரம் அவசியம் என்ற விதியை ஐந்து ஆண்டுகளுக்கு நீதிமன்றம் நிறுத்தி வைத்தது.
- விசாரணைக்கு முன், அரசாங்க உரிமதத்தின் மீதான வெறும் சந்தேகத்தின் பேரில் வக்ஃப் அந்தஸ்து இழப்பை அனுமதிக்கும் விதியை அது ரத்து செய்தது.
- சொத்து உரிமைத் தகராறுகளை நிர்வாக அதிகாரிகள் பதிவுகளை மாற்றுவதன் மூலம் அல்லாமல் நீதித்துறைதான் தீர்க்க வேண்டும்.
- தீர்ப்பாயத் தீர்ப்புகள் முடிவு செய்யப்படும் வரை வக்ஃப் அமைப்புகளை அகற்றவோ அல்லது பதிவுகளை மாற்றவோ முடியாது.
- மத்திய மற்றும் மாநில வக்ஃப் வாரியங்களில் முஸ்லிம் அல்லாத உறுப்பினர்கள் எண்ணிக்கையில் நீதிமன்றம் வரம்பிட்டது மற்றும் முஸ்லிம் தலைமை நிர்வாக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.
- வக்ஃப் வாரியங்களின் கட்டாயப் பதிவு உறுதி செய்யப்பட்டது என்ற நிலையில் பதிவு செய்யப்படாத வக்ஃப் வாரியங்கள் இன்றும் பதிவுக்கு விண்ணப்பிக்கலாம்.

## இந்தியாவில் சாலை விபத்துகள்




- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் 4,80,583 சாலை விபத்துகள் பதிவாகியுள்ளன என்ற நிலையில் இதன் விளைவாக 1,72,890 பேர் உயிரிழந்தனர்.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியாவில் சாலை விபத்து காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புகளில் 68.1% அதிக வேகம் காரணமாக ஏற்பட்டது.
- சாலை விபத்து காரணமான மொத்த உயிரிழப்புகளில் 44% இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்கள் தொடர்பானவையாகும்.
- தலைக் கவசம் அணியாதது 2023 ஆம் ஆண்டில் 54,000க்கும் மேற்பட்ட உயிரிழப்புகளுக்கு வழிவகுத்தது.
- 2023 ஆம் ஆண்டில் இந்தியா முழுவதும் இருக்கைப் பட்டை/சீட் பெல்ட் அணியாதது 16,025 உயிரிழப்புகளுக்குக் காரணமாக அமைந்தது.

- சாலைகளில் உள்ள பள்ளங்களால் 5,840 விபத்துகளும் 2,161 உயிரிழப்புகளும் ஏற்பட்டன என்ற நிலையில் இது 2022 ஆம் ஆண்டை விட அதிக அதிகரிப்பைக் காட்டுகிறது.
- சாலையில் தவறான திசையில் வாகனம் ஓட்டுதல் ஆனது சாலை விபத்துகளால் ஏற்பட்ட மொத்த உயிரிழப்புகளில் 5.5% விபத்திற்குக் காரணமாகும்.
- உத்தரப் பிரதேசத்தில் அதிகபட்சமாக 23,652 உயிரிழப்புகளும், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் மிகக் குறைவாக 24 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.
- பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் இரு சக்கர வாகனம் ஓட்டுபவர்கள் உட்பட எளிதில் பாதிக்கப்படக் கூடிய சாலை பயனர்களின் எண்ணிக்கை மொத்த உயிரிழப்புகளில் 68% ஆகும்.
- பெரும்பாலான பாதிக்கப்பட்டவர்கள் 18 முதல் 45 வயதுக்குட்பட்ட ஆண்களின் எண்ணிக்கை மொத்த உயிரிழப்புகளில் 66.4% ஆகும்.

## ஆண்ட்ரோத் கப்பல்




- இந்தியக் கடற்படையானது 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் தேதியன்று, 'ஆண்ட்ரோத்' என்று பெயரிடப்பட்ட குறைவான ஆழம் கொண்ட பகுதியில் இயங்கும் இரண்டாவது நீர்மூழ்கி எதிர்ப்பு போர் கப்பலை (ASW-SWC) பெற்றது.
- இந்தக் கப்பலானது கொல்கத்தாவின் கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் அண்ட் இன்ஜினியர்ஸ் (GRSE) நிறுவனத்தால் உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்டது.
- தோராயமாக 77 மீட்டர் நீளம் கொண்ட 'ஆண்ட்ரோத்' டீசல் எஞ்சின்-வாட்டர்ஜெட் எஞ்சின் கலவையால் இயக்கப் படும் மிகப்பெரிய இந்தியக் கடற்படை போர்க் கப்பல் ஆகும்.
- இந்தக் கப்பலானது, கடற்படையின் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல் திறன் மற்றும் கடலோரக் கண்காணிப்புத் திறன்களை மேம்படுத்துகிறது.
- 'ஆண்ட்ரோத்' என்ற பெயரானது லட்சத்தீவு தீவுக் கூட்டத்தில் உள்ள ஆண்ட்ரோத் தீவிலிருந்து பெறப்பட்டது.

## IEC பொதுக் கூட்டம்




- புது டெல்லியில் சர்வதேச மின் தொழில்நுட்ப ஆணையத்தின் (IEC) 89வது பொதுக் கூட்டத்தை (GM) இந்தியா நடத்த உள்ளது.
- இதற்கு முன்னதாக 1960, 1997 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்டதுடன், IEC GM கூட்டத்தினை இந்தியா நடத்துவது இது நான்காவது முறையாகும்.
- உலக மக்கள்தொகையில் 99% பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 170 நாடுகள் IEC ஆணையத்தின் உறுப்பினர் பட்டியலில் உள்ளதால் இது உலக வர்த்தகத்தில் சுமார் 20% மதிப்பின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது.
- நிலைத்தன்மை, செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தாக்கம், மின்சாரப் போக்குவரத்து இயக்கம் மற்றும் உள்ளடக்கிய தரநிலைகள் போன்ற முக்கிய கருத்துருக்களில் 150க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப மற்றும் மேலாண்மைக் குழு கூட்டங்கள் மற்றும் பயிலரங்கங்களை GM நடத்த உள்ளது.
- 1906 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட IEC, உலகம் முழுவதும் 30,000 நிபுணர்களின் ஆதரவுடன், மின்சாரம், மின்னணு மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில் நுட்பங்களுக்கான சர்வதேச தரநிலைகளில் உலகளாவிய தலைமைத்துவத்தினைக் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## இளஞ்சிவப்பு வரி

- பிங்க்/இளஞ்சிவப்பு வரி என்பது பெண்கள் தங்களுக்காக வடிவமைக்கப்பட்டத் தயாரிப்புகள் அல்லது சேவைகளுக்கு அதிக கட்டணம் செலுத்துகின்ற பாலின அடிப்படையிலான விலை பாகுபாட்டைக் குறிக்கிறது.
- இது அரசாங்கத்தால் விதிக்கப்படும் உண்மையான வரி அல்ல, ஆனால் நிறுவனங்களுக்கு நிதி ரீதியாக பயனளிக்கும் ஒரு விலை நிர்ணய நிகழ்வு ஆகும்.

- "பிங்க் வரி" என்ற சொல் ஆனது 1994 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தோன்றியது.
- சமீபத்திய ஆய்வில், பெண்களுக்கான தனிப்பட்டப் பராமரிப்புப் பொருட்கள் ஆண்களுக்கான ஒத்த தயாரிப்புகளை விட 13% அதிகம் என்று கண்டறியப்பட்டுள்ளது.
- அமெரிக்காவில் பெண்களுக்கான ஆபரணங்கள் மற்றும் ஆடைகள் முறையே 7% மற்றும் 8% விலை அதிகம் என்று கண்டறியப்பட்டது.
- அமெரிக்காவில் பெண்களுக்கான சட்டைகளின் உலர் சலவை விலை ஆண்களின் சட்டைகளுக்கு விதிக்கப்படுவதை விட 90% அதிகமாகும்.
- பொருளாதார சமத்துவத்தை மேம்படுத்துவதற்காக பாலின அடிப்படையிலான விலை பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டு வருமாறு ஐக்கிய நாடுகள் சபை 2017 ஆம் ஆண்டில் அதன் உறுப்பினர் நாடுகளை வலியுறுத்தியது.
- சர்வதேச நிதி மாணவர்கள் சங்க ஆராய்ச்சியின்படி, 67% இந்தியத் தனிநபர்களுக்கு பிங்க் வரி பற்றி தெரியாது.
- 2018 ஆம் ஆண்டில், இந்தியாவின் மத்திய அரசு, முன்னர் 12% ஆக விதிக்கப்பட்டிருந்த சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து (GST) தனிப் பயன்பாட்டுத் துப்புரவுத் துணிகள் / சானிட்டரி நாப்கின்கள் மற்றும் டாம்பான்களுக்கு விலக்கு அளித்தது.
- பாலின-நடுநிலை அல்லது ஆண்களுக்கான வகைகளைத் தேர்ந்தெடுத்து, ஓர் அலகுக்கான விலைகளை ஒப்பிடுவதன் மூலம் நுகர்வோர் இளஞ்சிவப்பு வரியைத் தவிர்க்கலாம்.




## இந்தியா மற்றும் நார்வே – ஆயுதப் பரவல் தடை குறித்த பேச்சுவார்த்தை

- இந்தியா மற்றும் நார்வே ஆகியவை அவற்றின் முதல் கடல்சார் பாதுகாப்பு, ஆயுதக் குறைப்பு மற்றும் பரவல் தடை பேச்சுவார்த்தையினை நார்வேயின் ஒஸ்லோவில் நடத்தின.
- சர்வதேச சட்டத்தைப் பின்பற்றிப் பாதுகாப்பான கடல்சார் சூழலைப் பேண இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.

- இந்தப் பேச்சுவார்த்தையானது, கடல்சார் விவகாரங்களில் பொருளாதார வளர்ச்சி, அமைதி மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.
- அடுத்தச் சுற்று பேச்சுவார்த்தையானது புது டெல்லியில் நடைபெற உள்ளது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### செயற்கை நுண்ணறிவின் உதவியுடன் வானிலை முன்னறிவிப்பு





- வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகம் ஆனது, 2025 ஆம் ஆண்டில் 13 மாநிலங்களில் 3.8 கோடி விவசாயிகளுக்கு பருவமழை முன்னறிவிப்புகளை அனுப்ப செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தியது.
- விவசாயத்திற்கான செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வானிலை முன்னறிவிப்புகளின் இலக்கு சார்ந்த பரப்புதல் இந்தியாவில் முதல் முறையாக மேற் கொள்ளப் பட்டது.
- மழைப்பொழிவிற்கு நான்கு வாரங்களுக்கு முன்பு வரை m-Kisan தளத்தின் கீழ் SMS மூலம் முன்னறிவிப்புகள் அனுப்பப்பட்டன.
- பயன்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு மாதிரிகளில் கூகிளின் வலையமைப்பு

GCM (உலகளாவிய சுழற்சி மாதிரி) மற்றும் ECMWF மையத்தின் (நடுத்தர தூர வரம்பிலான வானிலை முன்னறிவிப்புகளுக்கான ஐரோப்பிய மையம்) செயற்கை நுண்ணறிவு முன்னறிவிப்பு அமைப்புகள் (AIFS) ஆகியவை அடங்கும்.

- இந்த மாதிரிகள் ஆனது, பருவமழை தொடக்கத்தையும் இடைநிறுத்தங்களையும் கணிப்பதில் வழக்கமான முன்னறிவிப்புகளை விஞ்சியது.
- செயற்கை நுண்ணறிவு சார்ந்த முன்னறிவிப்புகள் பருவமழை முன்னேற்றத்தின் நடுப்பகுதியில் 20 நாட்கள் அளவிலான இடைநிறுத்தத்தை சரியாக கணித்தன.
- விவசாயிகள், தொடர்ச்சியான மழைப் பொழிவு தங்கள் பகுதிகளை அடையும் வரை அது குறித்த வாராந்திர முன்னறிவிப்புகளைப் பெற்றனர்.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## பிரவுன் டிரவுட் மறு அறிமுகம்




- பிரவுன் டிரவுட் இனமானது முதன்முதலில் 1900 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் விளையாட்டு சார்ந்த மீன்பிடித்தலுக்காக காஷ்மீரில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- காஷ்மீரின் டச்சிகாமில் உள்ள பஞ்சகம் ஓடையில் அறிமுகப்படுத்தப்பட்ட 1,800 டிரவுட் மீன் குஞ்சுகள் ஆரம்ப கட்ட வெற்றிகரமான அறிமுகத்தில் அடங்கும்.
- கட்டுப்பாடற்ற மீன்பிடித்தல் பல தசாப்தங்களாக பிரவுன் டிரவுட் மீன்களின் எண்ணிக்கையில் நிலையான சரிவை ஏற்படுத்தியது.
- மீன் வளத்துறையானது தற்போது பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ் பிரவுன் டிரவுட் மீன்களின் எண்ணிக்கையை மீண்டும் அதிகரித்து வருகிறது.
- அவற்றின் தன்னின உண்ணி சாராத இனப்பெருக்க காலத்தில் அதாவது அக்டோபர் மாதத்தில் ஓடைகளில் அறிமுகப்படுத்தப்பட திட்டமிடப்பட்டுள்ளது.
- ஆற்றுப் படுகை ஆனது வாழ்விடத்திற்கு அச்சுறுத்தலாக இருந்தாலும் இந்த மறு அறிமுகமானது விளையாட்டு சார்ந்த மீன்பிடித்தல் மற்றும் சுற்றுச்சூழல் சார் சுற்றுலாவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## எர்ரா மட்டி திப்பலு




- விசாகப்பட்டினம்-பீமுனிபட்டணம் கடற்கரை சாலையில் உள்ள சிவப்பு மணல் திட்டுகளான எர்ரா மட்டி திப்பலு, யுனெஸ்கோவின் இயற்கைப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.
- 10 முதல் 30 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்தத் தளம், ஏற்கனவே இந்தியாவின் 34 தேசியப் புவி சார் பாரம்பரியத் தளங்களில் ஒன்றாக உள்ளது.
- இந்த மணல் குன்றுகள் சுமார் 18,500 ஆண்டுகளுக்கு முன்பு கடைசி பனிப்பாறை உருகல் காலத்தின் உச்சக் கட்டத்தின் போது கடல் மட்டம் சுமார் 100 மீட்டர் பின் வாங்கிய போது உருவாக்கப்பட்டன.
- காலப்போக்கில் ஆக்ஸிஜனேற்றம் அடையும் இரும்புத் தாதுக்கள் அங்குக் காணப் படுவதால் மணல் சிவப்பு நிறத்தில் காணப்படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சாரதா ஹாஃப்மேன் மறைவு




- புகழ்பெற்ற பரதநாட்டிய நிபுணர் மற்றும் கலாக்ஷேத்ரா ஆசிரியரான அல்லாடி சாரதா (சாரதா ஹாஃப்மேன்) கலிபோர்னியாவில் காலமானார்.
- அவர் 1929 ஆம் ஆண்டு ஜூன் 15 ஆம் தேதியன்று சென்னை அடையாறில் உள்ள தியாசாபிகல் சொசைட்டி (பிரம்மஞான சபை) வளாகத்தில் பிறந்தார்.

- அவர் சின்ன சாரதா என்றும் கலாக்ஷேத்ரா சமூகத்தில் சாரதா ஆசிரியர் என்றும் பரவலாக அறியப்பட்டார்.
- பரதநாட்டியத்திற்கான கலாக்ஷேத்ரா முறையை வடிவமைப்பதிலும் தரப் படுத்துவதிலும் சாரதா ஆசிரியர் முக்கியப் பங்கு வகித்தார்.
- 1996 ஆம் ஆண்டில் மத்திய சங்கீத நாடக அகாடமி விருதையும், கலைகளில் சிறந்து விளங்குவதற்கான முதல் ருக்மிணி தேவி பதக்கத்தையும் பெற்றார்.

# முக்கிய தினங்கள்

## இந்தி திவாஸ் 2025 - செப்டம்பர் 14




- இது இந்தி மொழியின் முக்கியத்துவத்தையும் பயனையும் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று, அரசியலமைப்பு சபையானது தேவ நாகரி எழுத்து வடிவங்களுடன் கூடிய இந்தி மொழியை இந்தியாவின் அதிகாரப்பூர்வ மொழியாக ஏற்றுக் கொண்டது.
- இந்த நாள் 1953 ஆம் ஆண்டு முதல் அதிகாரப் பூர்வமாகக் கொண்டாடத் தொடங்கியது.
- முதல் உலக இந்தி மாநாடு 1975 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் தேதியன்று நாக்பூரில் நடைபெற்றது.

# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோ பட்டியலில் 7 இந்திய இயற்கைத் தளங்கள்

- 2025 ஆம் ஆண்டில், யுனெஸ்கோ அதன் தற்காலிக உலகப் பாரம்பரியப் பட்டியலில் ஏழு புதிய இந்தியத் தளங்களைச் சேர்த்தது.
- இது தற்காலிகப் பட்டியலில் உள்ள மொத்த இந்தியத் தளங்களின் எண்ணிக்கையை 69 ஆக அதிகரித்தன.
- 69 தளங்களில், 49 தளங்கள் கலாச்சாரப் பிரிவின் கீழும், 17 இயற்கைப் பிரிவின் கீழும், மூன்று கலப்புப் பிரிவின் கீழும் சேர்க்கப்பட்டன.
- பஞ்ச்கனி மற்றும் மகாபலேஷ்வர் (மகாராஷ்டிரா) ஆகிய இடங்களில் உள்ள தக்காண

வரிப் பாறைகள் உலகின் மிகப்பெரிய பசால்டிக் / எரிமலைப்பாறைக் குழம்பு அமைப்புகளில் ஒன்றாக இருப்பதற்காக சேர்க்கப்பட்டன.

- செயிண்ட் மேரிஸ் தீவுத் தொகுப்பு (கர்நாடகா) கிரெட்டேசியஸ் காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்த அதன் நெடுவரிசை பாசால்டிக் பாறைக் குழம்பு அமைப்புகளுக்காக பட்டியலிடப்பட்டது.
- கிழக்கு காசி மலைகளில் (மேகாலயா) உள்ள மேகலாயன் காலக் குகைகள் அவற்றின் விரிவான சுண்ணாம்புப் பாறைக் குகை அமைப்புகளுக்காக சேர்க்கப்பட்டன.
- கிஃபைரில் (நாகாலாந்து) உள்ள நாகா மலை ஒபியோலைட் கண்டத் தகடுகளில் தள்ளப் பட்டு வெளித்தோன்றிய பெருங்கடல் தட்டுப் பிரிவுகளைக் குறிக்கிறது.
- விசாகப்பட்டினத்தில் (ஆந்திரப் பிரதேசம்) உள்ள எர்ரா மட்டி திப்பலு என்பது கடல் மட்ட மாற்றங்களைக் காட்டும் சிவப்பு மணல் திட்டுகளின் தேசியப் புவி சார் பாரம்பரிய நினைவுச் சின்னமாகும்.
- திருப்பதியில் (ஆந்திரப் பிரதேசம்) உள்ள திருமலை மலைகள் அவற்றின் ஒருங்கிணைந்தச் சுற்றுச்சூழல் மற்றும் ஆன்மீக முக்கியத்துவத்திற்காக பட்டியலிடப் பட்டன.
- கேரளாவில் உள்ள வர்க்கலா அதன் தனித்துவமான கடலோரப் பாறைகள் மற்றும் முக்கியமான புவியியல் அமைப்புகளுக்காக சேர்க்கப்பட்டது.

| Natural Site | Location (State/Region) |
|---|---|
| Deccan Traps at Panchgani & Mahabaleshwar | Maharashtra |
| St. Mary's Island Cluster | Karnataka |
| Meghalayan Age Caves (East Khasi Hills) | Meghalaya |
| Naga Hill Ophiolite (Kiphire) | Nagaland |
| Erra Matti Dibbalu (Red Sand Dunes) | Visakhapatnam, Andhra Pradesh |
| Tirumala Hills | Tirupati, Andhra Pradesh |
| Varkala Cliffs | Kerala |

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★